(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

NFWC

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் - I<br>Geography - I | Three Hours<br>Gr. 13 (2023) | 22 | T | I |

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## அறிவுறுத்தல்கள்:

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப் பட வேண்டும்

## பகுதி - I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. புவி மீது இட ரீதியான, கால ரீதியான நிலத் தோற்றப்பாடுகளை முன்வைப்பதற்குப் பயன்படுவது.
(1) வரைபுகள் (2) புள்ளிவிபர நுட்பங்கள் (3) படம்
(4) படிமங்கள் (5) வானிலை நுட்ப முறைகள் (…...)

2. உண்மையான நிலத்தோற்றத்தில் காணப்படுகின்ற பௌதிக, பண்பாட்டம்சங்களை ஒரு அளவுத்திட்டத்திற்கு ஏற்ப முன்வைக்கும் படம்.
(1) கருப்பொருள் படம் (2) இடவிளக்கப் படம் (3) வரைபுகள்
(4) செய்மதிப்படிமங்கள் (5) புள்ளி விபர நுட்பங்கள் (…...)

3. பின்வருவனவற்றில் பௌதிக அம்சங்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) மணற்குன்று, பாதுகாக்கப்பட்ட வன எல்லை
(2) காடு, ஆற்றிடைத்தீவு
(3) காடு, கைவிடப்பட்ட குளம்
(4) நீர்ப்பாசனக் கால்வாய், ஆறு
(5) பிரதான வீதி, புகையிரத வீதி (…...)

4. புவியியல் தரவுகளை எண்ணிலக்க முறையாக மாற்றி கணினிக்கு உள்ளீடு செய்வதற்குப் பயன்படும் உபகரணங்களில் ஒன்று
(1) திரை (2) அச்சு உபகரணம் (3) சுட்டி
(4) விசைப்பலகை (5) தரவு (…...)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

5. காவித்தரவில் நீர்த்தேக்கம், பயிர் நிலங்கள் போன்றவற்றினை வரைந்து காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுவது.
   (1) புள்ளிகள் (2) நிரல்கள் (3) கோடுகள்
   (4) நிரைகள் (5) பல் கோணம் (......)

6. முதல் நிலைத் தரவுகள் சேகரிக்கப்படும் முறைகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
   (1) ஆய்வுகள், அவதானிப்பு, அளவீடு
   (2) நூலகம், இணையம், வரைபடம்
   (3) ஆய்வுகள், நூலகம், அளவீடு
   (4) அவதானிப்பு, இணையம், வரைபடம்
   (5) அளவீடு, ஆய்வுகள், வரைபடம் (......)

7. தரவுகளின் பெறுமானங்கள் தொடர்ச்சியான பரம்பலைக் குறித்துக் காட்டுவதாக இருக்கும் தரவு.
   (1) அளவு சார் தரவு (2) பண்பு சார் தரவு (3) தொடர் தரவு
   (4) தொடர்ச்சியற்ற தரவு (5) பச்சைத் தரவு (......)

8. பங்கேற்பு அவதானிப்பு என்பது.
   (1) ஆய்வு இடம்பெறும் களத்திற்கு ஆய்வாளன் சென்று தகவல்களை அவதானித்துப் பெற்றுக் கொள்வதாகும்.
   (2) ஒரு விடயத்தினை உன்னிப்பாக அவதானித்து தகவல்களைச் சேகரித்துக் கொள்வதாகும்.
   (3) தெரிவு செய்யப்பட்ட பதிலளிப்பவர்களிடம் இருந்து வினாக்கொத்து ஒன்றின் மூலம் தகவல்களைச் சேகரித்துக் கொள்வதாகும்.
   (4) ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட மாதிரியில் உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடல் மூலம் தகவல்களைச் சேகரித்துக் கொள்வதாகும்.
   (5) உபகரணங்கள் மூலம் தகவல்களைச் சேகரித்துக் கொள்வதாகும். (......)

9. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் அடிப்படைப் பிரிவுகளின் எண்ணிக்கை யாது?
   (1) 10 (2) 08 (3) 05 (4) 03 (5) 02 (......)

10. இடவிளக்கப்படத்தில் உண்மை நிலத்தோற்றத்தின் அளவிற்கும் படத்தின் அளவிற்கும் இடையிலான விகிதம்
    (1) திசை (2) அளவுத்திட்டம் (3) தனி அமைவிடம்
    (4) சார்பு அமைவிடம் (5) இடவிபரம் (......)

11. புவிமேற்பரப்பில் காணப்படும் மூன்றாம் வகை நிலவுருவங்களை உருவாக்குபவை.
    (1) மலையாக்க விசை (2) கண்டவாக்க விசை (3) தின்னல் கருவிகள்
    (4) இழுவிசை (5) அமுக்க விசை (......)

12. மண்ணின் படையமைப்பில் வளமான வலயம் எனப்படுவது.
    (1) A படை (2) O படை (3) R படை (4) B படை (5) C படை (......)

13. இலங்கையில் 10 இலட்சம் ஆண்டுகளை விடப் பழமையான யுராசிக் பாறைகள்ல பரந்துள்ள இடம்
    (1) ஆண்டிகம (2) மீரிகம (3) கொலன்னாவ
    (4) இறக்குவானைக்குன்று (5) ஹப்புத்தளை மலைத்தொடர் (......)

14. உலகின் உயிர்ப்பு எரிமலைகளில் 70 % சதவீதம் பரந்திருக்கும் வலயம்
    (1) ஆபிரிக்க பிளவுப் பள்ளத்தாக்கு வலயம்.
    (2) மத்திய சமுத்திர தகட்டு எல்லைகள் சார்ந்த வலயம்.
    (3) மத்திய தரைக்கடல் பிரதேசம்
    (4) தென் அமெரிக்கக் கரையோரம்
    (5) பசுபிக் வலயப் பிரதேசம் (......)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

15. எரிமலை கக்குகையால் உருவாகிய தள்ளல் நிலவுருவங்களாவன
(1) ஆட்பிளவுக் கற்குகை, பாதாளக்கற்குகை, லாவாக் கூம்பு
(2) எரிமலைக் கூம்பு, லாவாக் கூம்பு, எரிமலை வாய்
(3) ஆட்பிளவுக் கற்குகை, சாம்பல் கூம்பு, எரிமலைக் கழுத்து
(4) வில்லைத் தீப்பாறை, குமிழ் தீப்பாறை, குழிவுத் தீப்பாறை
(5) ஆட்பிளவுக் கற்குகை, பாதாளக் கற்குகை, எரிமலைப் பெருவாய் (…...)

16. மலைப் பனிக்கட்டி ஆற்றரிப்பினால் உருவாகின்ற அரித்தல் நிலவுருவங்களாவன.
(1) U வடிவப் பள்ளத்தாக்கு, கூம்பகச்சிகரம், வட்டக் குகை
(2) பக்கப்படிவு, இடைப்படிவு, நுழைகளிகள்
(3) செம்மறியுருப் பாறை, நீள்மணற் குன்றுகள், கெண்டித் துளைகள்
(4) தீவுகள், சேற்று நிலம்,குத்துப் பாறைவாற் குன்று
(5) தளத்திடைக் குன்று, பானைகுழி, போல்ஜே (…...)

17. இலங்கையில் நிலச்சரிவு ஏற்படுகின்ற இரண்டு மாவட்டங்களைக் கொண்ட விடை
(1) கண்டி, யாழ்ப்பாணம் (2) காலி, அம்பாறை (3) நுவரெலியா, கேகாலை
(4) மன்னார், வவுனியா (5) மாத்தளை, பொலன்னறுவை (…...)

18. வளி அமுக்கத்தினை அளவிடும் அலகு
(1) சென்றி மீற்றர் (2) பரனைற் (3) மில்லி மீற்றர்
(4) மில்லி பார் (5) செல்சியஸ் (…...)

19. வளிமண்டலத்தின் பொதுச் சுற்றோட்டத்தில் அடங்குகின்ற காற்றுக்கள்.
(1) பருவக் காற்று, சூறாவளி
(2) முனைவுக்காற்று, சூறாவளி
(3) மேலைக் காற்று, பருவக் காற்று
(4) முனைவுக்காற்று, முரண் சூறாவளி
(5) வியாபாரக் காற்று, மேலைக்காற்று (…...)

20. இலங்கையில் அதிக மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் இடம்.
(1) வட்டவளை (2) மாலிபொட (3) யட்டியாந்தோட்டை
(4) பண்டாரவளை (5) கினிகத்தேனை (…...)

21. பசுபிக் சமுத்திர நீரின் வெப்பநிலை அதிகமாதல் வளியமுக்கம் மற்றும் காற்றின் போக்கில் ஏற்படும் மாற்றங் காரணமாக ஏற்படும் நிகழ்வு
(1) எரிமலை வெடிப்பு (2) எல்நினோ (3) புவிநடுக்கம்
(4) லாநினா (5) சுனாமி (…...)

22. மிதமிஞ்சிய வளங்களின் பாவனையை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை
(1) வினைத்திறனான வளப்பயன்பாட்டினை மேற்கொள்ளல்.
(2) விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.
(3) இயற்கை வளங்களின் நுகர்வினை அதிகரித்தல்.
(4) பச்சை வீட்டு வாயுக்களைத் தடை செய்தல்.
(5) இரசாயனப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தல். (…...)

23. மத்திய கோட்டிற்கு இருகரைகளிலும் பரம்பியுள்ள உயிர் பெருந்திணிவு
(1) மத்திய தரைக் காடுகள்
(2) இடைவெப்ப வலய காடுகள்
(3) அயன மழைக் காடுகள்
(4) இடைவெப்ப புல் நிலங்கள்
(5) தைக்கா உயிர்ப் பெருந்திணிவு (…...)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

24. பின்வருவனவற்றிலிருந்து அயன வலய புல் நிலங்களின் தொகுதியைத் தெரிக.
(1) சவன்னா, கம்பொஸ், லானோஸ்
(2) ஸ்ரெப்பீஸ், பிறேயரீஸ், பம்பாஸ்
(3) டவுண்ஸ், வெல்ட், கம்பொஸ்
(4) வெல்ட், சவன்னா, லானோஸ்
(5) பிறேயறிஸ், பம்பாஸ், சவன்னா (…...)

25. மெல்லிய இலைகளைக் கொண்டிருத்தல், நீண்ட வேர்த் தொகுதி, சதைப் பிடிப்பான தண்டு கொண்ட தாவரங்கள் போன்ற இயல்புகளையுடைய தாவரங்களின் பண்புகள் காணப்படும் உயிர்ப் பெருந்திணிவு.
(1) அயன மழைக்காட்டு உயிர்ப்பெருந்திணிவு
(2) தூந்திரா உயிர்ப்பெருந்திணிவு
(3) தைக்கா உயிர்ப்பெருந்திணிவு
(4) பாலை வன உயிர்ப்பெருந்திணிவு
(5) இடைவெப்ப வலய உயிர்ப்பெருந்திணிவு (…...)

26. ஏறுவரிசை அடிப்படையில் உலக குடித்தொகைப் பரம்பல் காணப்படும் வலயங்கள்
(1) ஆசியா, ஆபிரிக்கா, ஓசானியா, ஐரோப்பா
(2) ஓசானியா, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஆசியா
(3) தென் அமெரிக்கா, ஆசியா, வடஅமெரிக்கா, ஓசானியா
(4) ஐரோப்பா, ஓசானியா, ஆபிரிக்கா, ஆசியா
(5) ஆபிரிக்கா, ஓசானியா, வட அமெரிக்கா, ஐரோப்பா (…...)

27. குடித்தொகைக் கூம்பில் பிறப்பு, இறப்பு வீதம் அதிகமாக இருந்து ஆயுள் எதிர்ப்பார்ப்புக் குறைந்த மட்டத்தில் காணப்படும் கட்டம்
(1) சுருங்கும் கட்டம் (2) மத்திய கட்டம் (3) நிலையான கட்டம்
(4) ஆரம்பக் கட்டம் (5) விரிவடையும் கட்டம் (…...)

28. ஒரு நாட்டின் குடித்தொகையில் உற்பத்திச் செயற்பாடுகளை விட நுகர்வு மீது அதிகளவு செல்வாக்குச் செலுத்தும் வயதுத் தொகுதியினர்.
(1) 0 – 5 (2) 6 – 15 (3) 18 – 25 (4) 28 – 45 (5) 60 – 74 (…...)

29. இலங்கையில் ஆண்களின் பங்களிப்பினை விட பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கின்ற துறை
(1) அரசியல் துறை (2) வைத்தியத் துறை (3) ஆசிரியத்துறை
(4) பொறியியல் துறை (5) விவசாயத் துறை (…...)

30. பின்வருவனவற்றிலிருந்து நகரக் குடியிருப்பின் பண்பினைத் தெரிவு செய்க.
(1) தற்காலிக, நிரந்தரக் குடியிருப்புக்களைக் காணமுடியும்.
(2) சேரிகள், குடிசைகள், குறைந்த வசதியுடைய வீடுகளைக் காணமுடியும்.
(3) ஆரம்பப் பொருளாதார நடவடிக்கைகளைக் காண முடியும்.
(4) வீதியமைப்பு முறையற்றதாகவும், வளர்ச்சியடைந்ததாகவும் இருக்கும்.
(5) பயிர்ச் செய்கை நிலங்கள், கட்டடங்கள் அமைக்கப்பட்ட பகுதிகளைத் தெளிவாக இனங்காண முடியும். (…...)

31. இலங்கையின் குடியிருப்புக்கள் கரையோரப் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்தமைக்கான காரணம்.
(1) கலிங்கமாகன் படையெடுப்பு
(2) பொருளாதார ரீதியாகவளமான பிரதேசம்
(3) வரட்சியான காலநிலை
(4) மேலைத்தேசத்தவரின் வருகை
(5) உட்கட்டமைப்பு விருத்தி (…...)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

32. நகராக்கம் ஏற்படுவதில் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தும் காரணி
(1) கிராமப் பகுதிகளில் இருந்து நகரப் பகுதிகளுக்கு இடம் பெயர்தல்.
(2) நகர மக்களின் இயற்கை அதிகரிப்பு
(3) பொருளாதார ரீதியாக ஏற்படும் மாற்றம்
(4) உட்கட்டுமான விருத்தி
(5) கைத்தொழில் மையங்களின் அதிகரிப்பு (…...)

33. இலங்கையில் சிசு மரண வீதமும், 5 வயதிற்கு குறைந்த பிள்ளைகளின் இறப்பு வீதமும் மிக அதிகமாகக் காணப்படும் நகரம்
(1) புசல்லாவ (2) பண்டாரவளை (3) மாத்தளை
(4) அம்பாந்தோட்டை (5) கொழும்பு (…...)

34. பசுமைப் புரட்சியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பாக்கம் செய்யப்பட்ட விதைகள் என்பது.
(1) அதிக வினைத்திறன் கொண்ட புதிய விதைகளை உற்பத்தி செய்வது.
(2) ஒரே குடும்பத்தையுடைய பல பண்புகளைக் கொண்ட விதைகள் இரண்டைக் கலந்து விசேட பண்புகளைக் கொண்ட விதைகளை உற்பத்தி செய்வது.
(3) மரபணு ரீதியாக வேறுபட்ட இரண்டு விதைகளைக் கருக்கட்டச் செய்து புதிய தாவரம் ஒன்றினை உருவாக்குவது.
(4) காலநிலை மாற்றங்களைத் தாங்கக் கூடிய குறைந்த விளைச்சலைத் தரக் கூடிய விதையினங்களை உருவாக்குவது.
(5) நீர் முகாமைத்துவத்தினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட நவீன விதையினங்கள் (…...)

35. 5 வயதுக்குக் குறைந்த 45 சதவீதமான பிள்ளைகளின் இறப்பிற்குக் காரணமான விடயம்
(1) போசாக்குக் குறைபாடு
(2) தடுப்பு மருந்துகளின் பற்றாக்குறை
(3) பிள்ளைகளின் மருத்துவத்திற்கு போதியளவு நிதியினை நாடுகள் ஒதுக்காமை
(4) மிகையான உணவு நுகர்வு
(5) சமமான உணவு விநியோகம் (…...)

36. உலகில் அதிகளவில் பயன்படுத்தப்படும் சக்தி மூலம்
(1) நிலக்கரி (2) காற்று சக்தி (3) சூரிய சக்தி
(4) பெற்றோலியம் (5) இயற்கை வாயு (…...)

37. இலங்கையின் அபதைற் கனியப் படிவு பரந்துள்ள பிரதேசம்
(1) புல்மோட்டை (2) புதுவைக் கட்டு (3) எப்பாவல
(4) ராகெதர (5) நிலாவெளி (…...)

38. இந்தியாவில் இரும்புருக்குக் கைத்தொழில் பரந்துள்ள பிரதேசம்
(1) நர்மதா நதிப் பள்ளத்தாக்கு (2) கங்கை நதிப் பள்ளத்தாக்கு (3) சிந்து நதிப் பள்ளத்தாக்கு
(4) தாமோதாரப்பள்ளத்தாக்கு (5) பிரம புத்திரா நதிப் பள்ளத்தாக்கு (…...)

39. நுகர்வோரையும் உற்பத்தியாளரையும் தொடர்புபடுத்துகின்ற கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் காரணி
(1) மூலப் பொருள் (2) மூலதனம் (3) சந்தை
(4) போக்குவரத்து (5) வலுச்சக்தி (…...)

40. ஐக்கிய அமெரிக்காவில் போக்குவரத்தினை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த கைத்தொழில் மையம்.
(1) பொஸ்டன் (2) சிலிக்கன் பள்ளத்தாக்கு (3) மிசூரிப் பள்ளத்தாக்கு
(4) புளோரிடா (5) பிற்ஸ்பேக் (…...)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# பகுதி - II

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி ஐஐ இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி ஐஐஐ இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1: 50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப்படமும் வழங்கப்படும்

1. இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட $1:50,000$ அளவுத் திட்டத்திலமைந்த ஹப்புத்தளை இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**குறிப்பு :**

✶ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

✶ இடவிளக்கப் படத்தின் மேல் விடைகள் எழுதப்படக் கூடாது.

✶ உமது விடைத்தாளுடன் இடவிளக்கப் படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) படப் பகுதியில் திரிகோண கணித நிலையத்தினால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் அதிகூடிய உயரத்தினைக் குறிப்பிடுக. *(01 புள்ளிகள்)*

(ii) படப் பகுதியில் இடவுயரத்தினால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் உயரத்தினைத் தருக. *(01 புள்ளிகள்)*

(iii) படப்பகுதியின் தென்கிழக்கு மூலையில் பயன்படுத்தப்படாதிருக்கின்ற இரண்டு பண்பாட்டம்சங்களைப் பெயரிடுக. *(01 புள்ளிகள்)*

(iv) படப் பகுதியிலுள்ள இரண்டு வடிகால் பாங்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(v) படப் பிரதேசத்தில் உள்ள நான்கு சேவை நிலையங்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

(vi) வட பகுதியின் குடியிருப்புப் பரம்பலை வரையறுத்த இரண்டு காரணிகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(vii) தென்கிழக்குப் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளின் முனைப்பான பண்புகள் இரண்டினை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(viii) இப் பிரதேசத்தினை விருத்தி செய்வதற்கு நீர் முன்வைக்கக் கூடிய மூன்று ஆலோசனைகளை பட்டியல்படுத்துக. *(05 புள்ளிகள்)*

2. தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) கீவ் நகரம்

(ii) துருக்கி

(iii) கம்சக்காகுடா

(iv) பற்றக்கோனியா பாலைவனம்

(v) கரிபியன் கடல்

(vi) கொங்கோ நதி

(vii) தாஸ் மானியா

(viii) பிரனீஸ் மலைத்தொடர்

(ix) போக்கு வரத்தின் அடிப்படையில் விருத்தியடைந்த ஜப்பானிய நகரம்

(x) வட கடலையும் பால்டிக் கடலையும் இணைக்கும் கால்வாய்

*(10 x 01 = 10 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி – III

3. (i) பூகோள இடநிலைப்படுத்தல் (GPS) முறைமை என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை (GPS) இன் அடிப்படைப் பிரிவுகளைச் சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iii) பூகோள தகவல் முறைமையின் மூன்று பயன்பாடுகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) நவீன படவரைகலையின் மூன்று பொது இயல்புகளைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

4. (i) தரவு என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) தரவுகளின் இரண்டு வகைளையும் விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) முதனிலைத் தரவுகள் சேகரிக்கும் இரண்டு நுட்ப முறைகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) இரண்டாம் நிலைத் தரவு சேகரிக்கும் நுட்ப முறைகளால் ஆய்வாளன் எதிர்நோக்குகின்ற இரண்டு பிரச்சினைகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

5. (i) இட விளக்கப்படத்தில் பயன்படுத்தப்படுகின்ற பௌதிக அம்சங்கள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(ii) 1 : 50, 000 இடவிளக்கப்படத்தில் ஒரு இடத்தின் அமைவிடத்தினை எடுத்துக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற இரண்டு முறைகளை உதாரணத்துடன் விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) இடவிளக்கப்படம் ஒன்றினை பகுப்பாய்வு செய்யும் போது பின்பற்றப்படுகின்ற இரண்டு முறைகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) இன்று கணினி மூலம் தயாரிக்கப்பட்ட படங்களின் பாவனை அதிகரித்துக் காணப்படுவதற்கான இரண்டு காரணிகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

6. (i) படம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) படத்தின் இரண்டு வகைகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) இடவிளக்கப்படத்தின் மூன்று பயன்பாடுகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) அளவுத்திட்டம் என்பதனை வரையறை செய்து 1 : 50, 000 இடவிளக்கப்படத்தில் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு அளவுத்திட்ட முறைகளைத் தருக. *(04 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் - II<br>Geography - II | Three Hours<br>Gr. 13 (2023) | 22 | T | II |

மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

## பகுதி I பௌதிகப் புவியியல்

1. (i) A. எரி மலை என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

   B. உலகின் பிரதான எரிமலை வலயங்கள் நான்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

   (ii) எரிமலை செயல் முறையினை ஏற்படுத்தும் பிரதான காரணிகள் நான்கினைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

   (iii) எரி மலை வெடிப்பினால் உருவாகும் மூன்று தள்ளல் நிலவுருவங்களை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

   (iv) எரிமலை கக்குகையினால் ஏற்படுகின்ற மூன்று விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

2. (i) பனிக் கட்டியாற்றின் அரித்தல் செயற்பாடுகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

   (ii) மலைப் பனிக்கட்டியாற்றரிப்பினால் உருவாகும் மூன்று அரித்தல் நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

   (iii) மலைப் பனிக்கட்டியற்றரிப்பினால் உருவாகும் மூன்று படிதல் நிலவுருவங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

   (iv) நிலச்சரிவை ஆரம்பத்திலேயே அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற மூன்றுகாரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

3. (i) புவியின் வெப்ப பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளைத் தருக. (02 புள்ளிகள்)

   (ii) காலநிலையைக் கட்டுப்படுத்தும் மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(iii) இலங்கையின்

(A) தாழ் நில ஈரவலயம்

(B) தாழ் நில உலர் வலயம்

ஆகியவற்றின் காலநிலைப் பண்புகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று உள்ளூர்க் காரணிகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

*4.* (i) உலகிலுள்ள நான்கு பாலைவனங்களின் பெயர்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) பாலைவனங்களில் காணப்படும் காலநிலைப் பண்புகள் மூன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) பாலைவன உயிர்ப் பெருந்திணிவின் தாவரங்களின் மூன்று பண்புகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) தற்காலத்தில் உயிர்ப்பெருந்திணிவுகள் எதிர்கொள்கின்ற மானிட ரீதியான மூன்று இடர்களை விளக்குக. *(06 புள்ளிகள்)*

## பகுதி II மானிடப் புவியியல்

*5.* அட்டவணை *1* இல் உலகின் பருமட்டான பிறப்பு வீதம் தொடர்பான தகவல்கள் தரப்படுள்ளன. அதனைப் பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

*அட்டவணை 1 பருமட்டான பிறப்பு வீதம் (1000 க்கு) 2020*

| **அபிவிருத்தி அடைந்த நாடுகள்** | | **அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள்** | |
|---|---|---|---|
| ஜப்பான் | 77 | நைஜீரியா | 48 |
| ஐக்கிய அமெரிக்கா | 11.9 | நைகர் | 46 |
| ஐக்கிய இராச்சியம் | 11.4 | மாலி | 42 |
| பிரான்ஸ் | 11.1 | ஸம்பியா | 40 |
| ஜேர்மனி | 9.3 | பாகிஸ்தான் | 27 |
| | | பங்களாதேஸ் | 18 |
| | | இந்தியா | 18 |
| | | ஆப்கானிஸ்தான் | 37 |
| | | தென்கொரியா | 08 |

*மூலம் : உலக புள்ளி விபரத் தரவு அறிக்கை 2020*

(i) அட்டவணையின் படி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பிறப்பு வீதம் அதிகளவிலுள்ள ஆபிரிக்க நாடுகள் இரண்டு, ஆசிய நாடுகள் இரண்டு என்பவற்றைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) அட்டவணையின் படி ஆபிரிக்க நாடுகளில் உயர்ந்த பிறப்பு வீதம் காணப்படுவதற்கான மூன்று காரணங்களை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(iii) அபிவிருத்தி அடைந்த நாடுகளில், அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து மிகக் குறைவான பிறப்புவீதம் காணப்படுவதற்கான மூன்று காரணங்களை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) பிறப்பு வீதம் அதிகமாகக் காணப்படும் நாடுகள் எதிர் நோக்குகின்ற மூன்று பிரச்சினைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

6. (i) நகராக்கம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) நகர சனத்தொகை அதிகரிப்பதற்கான மூன்று காரணங்களை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) நகர மயமாக்கத்தின் காரணமாக நாடு ஒன்று பெற்றுக்கொள்ளக் கூடிய மூன்று சாதகமான இயல்புகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் நகராக்கத்தின் அண்மைக் கால போக்குகள் மூன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

7. (i) சேதன விவசாயம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) சேதன விவசாயத்தில் பின்பற்றப்படும் மூன்று முறைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) சேதனப் பயிர் செய்கையின் மூன்று நன்மைகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையில் பின்பற்றப்படுகின்ற சேதன விவசாயம் சார்ந்த மூன்று முறைகளை விளக்குக *(06 புள்ளிகள்)*

8. (i) உற்பத்திக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படுகின்ற நான்கு வலுச் சக்திகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் காரணிகளில் போக்குவரத்து, சந்தை வசதிகளின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) கைத்தொழில் அமைவிடத்தினைத் தீர்மானிப்பதில் அரச கொள்கை இன்று பெறுகின்ற முக்கியத்துவத்தினை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) கைத்தொழில் அமைவிடம் தொடர்பான மூன்று அண்மைக் காலப் போக்குகளை விபரிக்குக *(06 புள்ளிகள்)*

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் நான்காம் தவணைப் பரீட்சை - 2023**

**தரம் 13 புவியியல் படம் (2 ஆம் வினாவிற்கு உரியது)**

